www.tamilarangam.net

# சஞ்சீவி

மலர் - 12

Chanchive 12 . udgave



AYA
87 RUE ... COLOMBES
92... ASNIERES SUR -
SEINE : FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சஞ்சீவி

மலர் - 12

விலை: 10 Kr.

உள்ளடக்கம்:


3. நோக்கு
5. திருக்குறள் விளக்கம்
6. கவிதை
7. கட்டுரை
11. கவிதை
12. சிறுவர் அங்கம்
17. கடிதங்கள்
19. கவிதை
20. சிறுகதை
27. கவிதை
28. Nødhjælp -(Srilanka)
30. Dansk Flygtningehjælp
34. டெனிஷ்க் கவிதை
35. தொடர் நவீனம்
38 கவிதை
39. கட்டுரை
42. சிறுகதை
48. கவிதை
49. சிரிக்க - சிந்திக்க.
54. குறுக்கெழுத்துப் போட்டி இல: 11


அட்டைப்பட விளக்கம்:

தேவ மகன் பிறந்த நாளில்
ஞால மெழுகும்;
இனி பரவட்டும்....

" CHANCHIVE "
Tamilsk-Dansk venskabsforening
P.Box: 1205
7500 Holstebro. D.K.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நோக்கு

அன்பான வாசகர்கட்கு!

முதற்கண் எமது நத்தார், புதுவருட வாழ்த்துக்கள். நத்தார் புதுவருட கொண்டாட்டத்திற்கான நகர அலங்கரிப்புக்கள் கண்களை ஒருதரம் மின்ன, மீண்டும், மீண்டும் பார்க்க வேண்டும் போல் ஆவலைத் தூண்டுகின்றது. இது தவிர நத்தார் விடுமுறைகள், சலுகைகள் போன்றவற்றை கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களும் அனுபவிக்கின்றனர். இது ஜேசுநாதரின் பிறப்புடன் சம்பந்தப்பட்ட கொண்டாட்டமாக இருப்பினும் டென்மார்க் போன்ற நாடுகளில் வாழும் எல்லா மொழி பேசும் மக்களும் இதில் ஏதாவது ஓர் விதத்தில் கலந்து கொள்ளுகின்றனர்.

இங்குள்ள வேலைத்தளங்களில் "கிறிஸ்மஸ் மதிய போசனம்" போன்ற கொண்டாட்டங்களோடு நத்தார் பண்டிகை அன்பளிப்புக்கள் வேலை செய்பவர்களுக்கு கொடுக்கப்படுகின்றது. பாடசாலைகளில் மாணவர்கள் இதில் பங்கு கொள்கின்றனர், பாலர் பராமரிப்பு நிலையங்களில் குழந்தைகள் கலந்து கொள்கின்றனர். இருப்பினும் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களும்பொது இடங்களில் பெரும்பாலும் கலந்து கொள்கின்றனர். ஆனால் வீட்டில் பெரும்பாலும் கொண்டாடுவது இடையாது. இங்கு வாழும் தமிழர்களாகிய நாம் இப்படியான கொண்டாட்டங்களில் காலப் போக்கில் இசைவாக்கம் அடைவதன் மூலம் கலந்து கொள்ள வேண்டிய சூழ்நிலைதான் பொதுவாகவுள்ளது.

www.tamilarangam.net



புதுவருட நல் முயற்சியாக பல தமிழ் - டெனிஸ் நட்புறவுச் சங்கங்கள் இலங்கையின் வடக்குக் கிழக்குக்கான நிவாரணப் பணியினை ஆரம்பித்துள்ளது. இது இலங்கை அரசின் கட்டுப்பாடு அல்லாமல் நேரடியாக வடக்கு- கிழக்குக்கு இந்த உதவி போய்ச் சேரும் வகையில் அமையும். தற்போதைய சூழ்நிலையில் இத்தகைய உதவி மிகவும் முக்கியமானது, என இங்குள்ள அனைவரும் எண்ணுவீர்கள் என்பது உண்மை.

ஒரு சிறு குப்பி விளக்கு கொளுத்தினால் கூட அந்த இடத்தில் நின்று விடும் சூழ்நிலையில் வாழும் எமது மக்களுக்காக இன்று நிவாரண நிதி வழங்கவும், தொடர்ந்து இத்தகைய நல்ல முயற்சியில் ஈடுபடவும் ஒத்துழைப்புத் தந்து உதவுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

"தனிமரம் தோப்பாகாது" என்பது போல் டென்மார்க்கின் பல தமிழ்-டெனிஸ் நட்புறவுச் சங்கங்கள் ஒன்றிணைந்து இந்த உதவியை நல்க முன்வந்திருப்பது மிகவும் பாராட்டத் தக்கது. இந்தப் பணியில் "சஞ்சீவி"யும் தன்னை இணைத்துக் கொள்வதில் பெருமையடைகின்றது.

இந்த நிவாரண நிதி சம்பந்தமான மேலதிக விபரங்கள் அடுத்த இதழில் பிரசுரமாகும்.

— சஞ்சீவி.

## "கலை விழா..."

Holstebro தமிழ் - டெனிஸ் நட்புறவுச் சங்கத்தினால், எதிர்வரும் 02.02.1991. அன்று இலங்கையின் வடக்கு- கிழக்கு பகுதியில் அகதிகளாக வாழும் தமிழ் மக்களிற்கு உதவிகள், அபிவிருத்திகள் செய்வதற்காக, நிதி திரட்டும் நோக்குடன், விழாவொன்றினை நடாத்தவுள்ளது.

தொடர்ச்சி. பக்: 5

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## திருக்குறள் விளக்கவுரை.

**சிறப்புஈனும் செல்வம் பெறினும், பிறர்க்குஇன்னா செய்யாமை, மாசற்றார் கோள்.**

கருத்துரை.

பெருமை தரும் செல்வம் கிடைப்பதாயினும் பிறர்க்குத் துன்பம் செய்யாமையே நல்லோர் கொள்கை.

பதவுரை.

சிறப்பு ஈனும் - பெருமையைத் தருகின்ற.
செல்வம் பெறினும் - செல்வத்தை அடைவதாயினும்.
பிறர்க்கு - மற்றவர்க்கு. இன்னா செய்யாமை - துன்பம் செய்யாமலிருப்பதே. மாசு அற்றார் - குற்றமற்றவர்களின். கோள் - கொள்கையாகும்.

இவ் விழாவின் மூலம் கிடைக்கவுள்ள நிதி-கள் யாவும், "Folkekirkens Nødhjælp" என்ற சர்-வதேச அமைப்பின் நேரடிக் கண்காணிப்பின்கீழ், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிற்கு வழங்கப்படும்.

நடைபெறவிருக்கும் கலை விழாவினில்-யாவரும் வந்து கலந்துகொண்டு, பாதிக்கப்பட்-ட தமிழ் மக்களுக்கு உதவிநல்குமாறு, அன்புடன் அழைப்பு விடுகிறோம்....

— பொன்-மகேஸ்வரன்.
(ஒப்பம்)
விழாக்குழுப் பொறுப்பாளர்

www.tamilarangam.net



வாய் தமிழர்கள் வருவாங்க, அவங்களை மதிச்சு இன்றும் நல்ல இம்சை பண்றது....

பெரிய:- பேய் நாயே... உனக்கெல்லாம் என்னடா தெரியும் பெரியவங்களை மதிக்கத் தெரியாத உன்னோட இவ்வளவு நேரம் கதைச்சதுக்கு TV பாத்திருக்கலாம்.

முற்றும்.

(-யாவும் கற்பனையே-)

# ஏன் பிறந்தான் ஈசன்

இழுக்ககற்றப் பிறந்த மகன் யேசு – அவன்
பிறப்பறிந்து கொண்டாடுதே காசி
தினமறிந்த மனித குலத்திற்கிங்கே
தெரியவில்லை ஏன் பிறந்தான் ஈசன்.

பூவுலக சமாதானம் போச்சே – பரன்
பிறந்த எண்ணம் நாசமாச்சே
போர்முரசம் குடி, கூத்து ஆச்சே
யாருமில்லை அவன்வழிக்காயாச்சே.

குடிமயக்கம் கொள்வதற்காய் நேசம் – பஞ்ச
கொடுமையிலே வாழுதேயோர் தேசம்
அடிமையிவருண்மை போச்சு ரோசம்
விடிவுக்காய்ப் பேசுவது வெளிவேசம்.

ஆகமங்கள் சொல்வதெல்லாம் வேதம் – இனி
ஆனாலும் எல்லாமே சேதம்
வேசைவலை வீழ்ந்ததிவன் தேகம்
நீசனுக் கெழுச்சியில்லை ஒருபோதும்.

குடி, காமம் குவலயத்தின் போக்கு – நல்ல
படிமுறைகள் மறந்தான் பரன் வாக்கு
நெடிகிலுமேன் சொல்வான் இவன் மக்கு
நியதி உலகழிவொன்றே முறை வாக்கு.

– சவேரியான்

www.tamilarangam.net



# புகலிடத்து இலக்கியமும் இனப்பிரச்சினையும்

12-09-1990
இலண்டன் கூட்டம்பற்றி

செல்வா.
இலண்டன்.

இனப்பிரச்சனையானது 1983ம் ஆண்டு தீவிரமடைந்ததன் பின்னர் எமது தமிழ்மக்கள் பலர் ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்திருப்பது வாசகர்கள் அறிந்ததே. இந்த அகதிகள் என்ற வட்டத்துக்குள் பல இலக்கிய விமர்சகர்கள், பேராசிரியர்கள் இலங்கையில் நாடகத்துறையில் தேர்ச்சி பெற்றவர்கள், நடிகர்கள் போன்றோரும் ஐரோப்பாவில் தஞ்சமடைந்துள்ளனர்.

இலண்டனைப் பொறுத்தவரையில் நாடகத்துறையை அழியவிடாது பாதுகாப்பதோடு நாடகம் மூலமாக "எரிகின்ற எங்கள் தேசத்தை" (இலங்கை) பற்றிய கருத்துக்களை கூறி மக்களை தட்டி எழுப்பி வருகிறார், "கண்ணாடி வார்ப்புகள் புகழ்" பாலேந்திரா. திரு. பாலேந்திரா அவர்கள் ஒரு பொறியியலாளர். இவரது நாடகமான "கண்ணாடி வார்ப்புகள்" இன்னும் இலங்கை ரூபவாகினி தொலைக்காட்சி சேவையிலும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்திலும் மாறிமாறி ஒலிபரப்பப்பட்டுக் கொண்டு இருக்கிறது.

இத்தகைய கலைஞர்கள் பற்றி இலங்கைப் பத்திரிகைகள் ஏதாவது எழுதி இருக்கின்றனவா என்று கேட்டால் இல்லை என்று தான் பதில் வரும்.

"சிலுக்கை" தவிர அவர்களுக்கு எந்த இலக்கியமும் தெரியாது. அந்நியர்களை புகழ்வதிலேயே நமது பத்திரிகைகள் தமது காலத்தை செலவிட்டுக் கொ-ண்டிருக்கின்றன.

இனி பாலேந்திராவின் பணிக்கு உறுதுணை புரிபவர்கள் பற்றியும் அவர்களது இலக்கியக் கருத்துக்கள் பற்றியும் சொல்லலாம் என எண்ணுகின்றேன். பாலேந்திராவின் படைப்புக்களுக்கு பின்னணி கொடுப்பவர்கள் மூவர், ஒருவர் அவரது துணைவியார் ஆனந்-தராணி அவர்கள், இவர் பிரபலமான ஒரு வானொலி ந-டிகை, "வாடைக்காற்று" என்ற இலங்கைத் திரைப்படத்தின் நாயகி, இனிமையான குரல் வளம் கொண்ட-வர். பாலேந்திராவின் வெற்றிக்கு பின்னால் இருப்பவர் என்று சொல்லலாம். அடுத்ததாக இக்குழுவில் புதிதாக பாடல்களைப் பாடுவதற்காக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார், ஈழத்துப் பாடல்களைப் பாடி புகழ் பெற்றிருக்கும் மெல்லிசைப்பாடகர் திரு. சத்தியமூ-ர்த்தி அவர்கள்; சத்தியமூர்த்தி முழுமையான வாய்ப்புகளு-ம், வசதிகளும் அளிக்கப்பட்டால் தென்னிந்திய திரைப்படக் கலைஞர்களுடன் மோதக்கூடியவர். வளமா-ன குரல் கொண்டவர். நிச்சயம் சாதனைபடைப்பார்.

அடுத்து திருமதி நிர்மலா ராகவன் அவர்கள் இலங்கையில் சிறையில் இருந்தவர். மட்டக்களப்பு சிறை உடைப்புடன் தப்பி தமிழ்நாட்டுக்கு வந்த, தற்போது லை-ண்டனில் உள்ளார். இவர் தனது உரையின் போது இலங்கையில் இனப்பிரச்சினை மோசமாகி நாம் ஐரோப்பா-வில் புகலிடம் பெற்ற பின்னர் தான் எதனையும் சுத-ந்திரமாக எழுத முடிகிறது. சுதந்திரமாக எமது கருத்து-க்களை வலியுறுத்த முடிகிறது என்றார். அவரது

www.tamilarangam.net



உரையில் இலங்கையில் கல்விமான்களை போல, சாதாரண பாமர மக்களைப் போல சுதந்திரமாக பேச ஆயுதம் ஏந்திய எந்த இயக்கங்களும் (குழுக்களும்) அனுமதிப்பதில்லை என்ற கருத்து தொனித்து நின்றது. இலங்கையில் தமிழ் மக்கள் அழிவதற்கு ஒருவகையில் எல்லா இயக்கங்களும் பொறுப் பேற்க வேண்டும் என்ற அங்கலாய்ப்பு தெரிந்தது.

அடுத்ததாக பேராசிரியர் சிவசேகரம் அவர்கள் ஐரோப்பாவில் இருந்து 65 தமிழ் சஞ்சிகைகள் வெளிவருகின்றன என்றும் இலங்கை தமிழ் பத்திரிகைகளை விட இந்த புகலிடத்து இலக்கிய சஞ்சிகைகள் மிக தரமானவை என்றும் இதன் எழுத்தாளர்களும், ஆசிரியர்களும் 25 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் என்று பெருமையாகச் சொன்னார். இலங்கையில் எழுதமுடியாததை இவர்கள் இங்கு எழுதுகின்றார்கள். இது ஒரு ஆரோக்கியமான முன்னேற்றம் என்றார். அதாவது இந்த தமிழ் இளைஞர்களின் இடப்பெயர்வு நல்ல இலக்கியத்தை படைத்திருக்கிறது என்று பெருமைப்பட்டார்.

மேலும் (ஐரோப்பாவில் வாழும் தமிழ் குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய விடயம் குறித்து பேசுகையில்) குழந்தைகள் தமிழில் பேசுவதில்லை ஆங்கிலத்திலேயே கதைக்கிறார்கள். அவ்வாறாயின் எப்படி எமது கலாச்சாரம் பற்றிய விடயங்களை அவர்கள் அறிந்து கொள்ளப் போகிறார்கள் என்று மற்றொரு பேராசிரியர் சிவபாதசுந்தரம் வேதனைப் பட்டார். பெற்றோர்கள் 10 நிமிடமாவது பிள்ளைகளுடன் தமிழில் கதைக்கவேண்டும், அதற்காக நேரத்தை ஒதுக்கவேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

அதற்கு நிர்மலா அவர்கள் நாம் நடுத்தரவர்க்கம்

www.tamilarangam.net



(Middle - class) தேவையேற்பட்டால், தமிழ் பேசும் பிரித்தானியராக மாறவேண்டிய தேவை ஒன்று இருப்பதால் இந்த மொழிபற்றி எமது மக்கள் அவ்வளவு கவலை கொள்வதில்லை என்றார். ஆயினும் கூட்டத்தின் இறுதியில் ஐரோப்பாவில் தரமான இலக்கியம் வளர வசதி படைத்தவர்கள் உதவ வேண்டும். என்பதோடு, எமது தமிழ்குழந்தைகள் தமிழை எழுத முடியாவிட்டாலும், பேசக்கூடிய அளவாவது நாம் அவர்களுக்கு உதவ வேண்டும் என்று ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது.

மேலும் மகிழ்ச்சியான செய்தி ஒன்றும் அங்கு தெரிவிக்கப்பட்டது. இலண்டனிலுள்ள பல உயர்தர கல்லூரிகள், க.பொ.த (உயர் தர) வகுப்புக்கு 25 மாணவர்கள் இருப்பார்களாயின் தமிழை ஒரு பாடமாக தமிழ் மாணவர்களுக்கு ஏற்படுத்தி தரலாம் என சம்மதம் தெரிவித்ததாக கூறப்பட்டது. நல்ல தொரு இலக்கிய கூட்டத்தை அனுபவித்த மனநிறைவோடு அங்கிருந்து புறப்பட்டேன்.

- முற்றும் -.

"கல்யாணத்தின் போது மணமக்கள் ஏன் கைகொடுத்துக் கொள்ளுகின்றார்கள்."

"குஸ்தியின் ஆரம்பத்தில் பயில்வான்கள் கைகொடுத்துக் கொள்வதில்லையா."

www.tamilarangam.net



# பிறப்பை பெருமையுறச் செய்

காற்றடிக்கும் திசையில் கருத்தசையும் மனிதா
ஏற்றம் என்றவழியில் என்று நடை நடப்பாய்

மனிதவாழ்வு ஒரு நல்வீடு
புனிதமாக நீயும் நாடு

கணிதமாக அதைப் போட்டு
வனிதமாக வாழ்ந்து பாரு.

ஒரு முறைதான் பிறப்பு
பெருமையுறச் செய் சிறப்பு
சிறுமை கொண்ட சிறு கூட்டம்
கருமையாக்கும் உந்தன் வாழ்வை

சிறந்த நண்பன் நல்முத்து
பிறந்து வந்தால் உன் சொத்து
கறந்தபாலின் சுவை போலே
கலந்து வாழ்ந்து களிகொள்ளு


நீரில் கலந்த பாலை
நீரை நீக்கி உண்ணும் அன்னம் போலே
பாரில் கலந்துவரும் மாசை
பகுத்து உணர்ந்து வாழப்பழகு.

நல்லபாம்பும் மிக சீறும்
நாகரத்தினமும் அங்கு வாழும்
கோபம் உள்ள இடத்தில் தானே
நற்குணமும் நிறைந்து காணும் பாரில்.

திருமதி- வேதா- இலங்காதிலகம்
SKANDERBORG.

www.tamilarangam.net






தமிழ் எழுத்துக்களை
நீங்களும் எழுதிப் பழகும் முறை.

எ எ ஏ ஏ ஐ ஐ

1. ஒரு வளர்ச்சியடைந்த கங்காரு சாதாரணமாக எத்தனை மீற்றர் தூரத்துக்குப் பாயும் ?

2. உலகசாதனையில் ஒன்றான தொடர்ச்சியாகப் பேசுதலில் 159 மணித்தியாலங்கள் பேசி சாதனை புரிந்தவர் எந்தநாட்டை சேர்ந்தவர் ?

3. ஏழு உலக அதிசயங்களில் ஒன்றான France ல் உள்ள அழகிய இரும்புக் கோபுரம் எத்தனையாம் ஆண்டு கட்டத் தொடங்கி எப்போது கட்டி முடிக்கப்பட்டது ?

4. 'கட்செவி' என எந்த உயிரினத்தை அழைப்பர் ?

5. இலங்கையில் கூடுதலாகத் சுண்ணாம்புக்கல் தோண்டி எடுக்கப்படும் தொகுதி எது ?

6. உலக வரலாற்றில் பிரபல்யம் வாய்ந்த நெப்போலியனின் விட்டினை அலங்கரித்ததும், அப்போது விலையுயர்ந்திருந்த உலோகமும் எது ?

*சிறார்களின் நன்மை கருதி கேள்விகளுக் கான பதில்களை அதே இதழில் வெளியிடுகின்றோம்.*

*மீதிக் கேள்விப்பதில்கள் பக்கம்: 41*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தனிமை

சிறுவர்கதை - சிவா.



தாத்தா சொல்லும் உபகதைகளைக் கேட்ட பின்பு உறங்கும் பழக்கம் கொண்டவன் குமரன், இன்றும் அவன் அடம் பிடித்தான்.

"தாத்தா.....தாத்தா....கதை சொல்லுங்கோ"

குமரா... நீ கதை சொல்லும் படி கேட்பதும். நான் கதை சொல்லுவதும் தானே ஒவ்வொருநாளும் நடை பெறும். ஒன்று, இன்று வித்தியாசமாக கதை

www.tamilarangam.net



சொல்லி முடிந்ததும். கதையைப் பற்றிக் கேள்வி கேட்பேன். கண்டிப்பாக நீ பதில் சொல்லியாக வேண்டும். உனக்கு விளங்காத விசயங்களை தயங்காமல் கேள், பதில் சொல்லிட்டால் இனிமேல் உனக்கு கதை சொல்ல மாட்டேன் என்றார் தாத்தா.

முதலில் சற்றுத் தயங்கினான் குமரன்..... சிறிது நேரத்தில், "தாத்தா நான் உங்கள் கேள்விக்கு பதில் சொல்லுகின்றேன். நீங்கள் இப்ப கதை சொல்லுங்கள்" என்று கெஞ்சினான் குமரன்.

தாத்தா குமரனை அணைத்துக் கொண்டு கதை சொல்ல ஆரம்பித்தார்.

முன்னொருகாலத்தில் சீன தேசத்தில் ஒரு ஓவியன் வாழ்ந்து வந்தான். அவன் "ரகன்" என ஆங்கிலத்தில் சொல்லப்படும் மிருகத்தினை மிக அழகாக, பல ஓவியங்களாக வரைந்தான். அவன் ஓவியங்களாக வரைந்ததுடன் நிற்காமல் "ரகனை"ப் பற்றி தனக்கு தெரிந்த மாதிரி விளக்கங்களும் கொடுத்தான்.

"தாத்தா.... தாத்தா.... ரகன் எப்படி இருக்கும்" என்று தாத்தாவை இடை மறித்துக் கேட்டான் குமரன்.

குமரா... ரகன் என்றால்.... முதலை மாதிரி தலை.... ஆனால் பாம்பு மாதிரி உடல் பகுதி, நீளமான இரண்டு கொம்புகள் இருக்கும். மூச்சு விடும் போது நெருப்பாக வெளியே வரும். மிகவும் பயங்கரமானது என்றார் தாத்தா.

"அப்படியா !!!.. தாத்தா" என்ற குமரன், தாத்தாவுடன் ஒட்டிக் கொண்டான்.

www.tamilarangam.net



அந்த சீனத்து ஓவியன் பிரபலமானான். மக்கள் அவனது திறமையை கதைக்கத் தொடங்கினார்கள். இப்படியாக ஓவியன் வாழ்ந்து வரும் போது ஒரு நாள் "நகன்" என்று அழைக்கப்படும் அந்த மிருகம் தன்மீது பற்றுக் கொண்ட ஓவியனை பார்க்க ஆசை கொண்டு ஓவியனிடம் சென்றது. நகன் காடுகளில் வசிக்கும் மிருகம். அதுக்கு வீடு எப்படிப்பட்டது. வீட்டுக்குள் எப்படிப் போவது என்பது தெரியாது. நகன் ஓவியனது வீட்டுக்கு வரும் போது நெருப்பைக் கொப்பளித்த படி, பூமியே அதிரும் படி அங்கு வந்தது.

தாத்தா.... கொப்பளித்தபடி என்றால் என்ன? என்று கேட்டான் குமரன்.

குமரா... "கொப்பளித்தபடி" என்றால் "கொப்பளித்தல்" என்று தான் சொல்வது "படி" என்பது சேர்த்துச் சொல்லும் போது அப்படிச் சொல்வது. உனக்கு கதை சொல்லி முடிந்த பின்பு இது பற்றிப் பேசுவோம்.... காலையில் பல் துலக்கிய பின்பு நீ என்ன செய்வாய்? தண்ணீரை வாய்க்குள் விட்டுத் துப்புவாய் இல்லையா! அதைத்தான் கொப்பளித்தல் எனச் சொல்வது. தண்ணீரைக் கொப்பளிப்பது போல் நெருப்பைக் கொப்பளித்துக் கொண்டு ஓவியனது வீட்டை சென்றடைந்தது. நகன் அப்படி வருவதைக் கண்ட ஓவியன் அப்போதுதான் அதனுடைய உண்மையான தன்மையை நேரடியாக அறிந்து கொண்டான். எனவே....

தாத்தா.... "தன்மை" என்றால் என்ன?

குமரா... தன்மை என்றால் பொதுவாக ஒவ்வொரு பொருளுக்கும், தனித் தனித் தன்மையுண்டு.... பால் வெண்மையானது. சீனி இனிக்கும். உப்பு உவர்க்கும். இப்படியானதைத்தான் "தன்மை" என அழைப்பர்

www.tamilarangam.net



என்றார் தாத்தா.

"அப்படியா!! ..தாத்தா" எனக் கூறியவன் தலையை ஆட்டியபடி கதையை கேட்க ஆர்வங்கொண்டவனாக "என்ன தாத்தா.....சொல்லுங்கள். என்றான் குமரன்.

எனவே.... நகன் வரும் போது நெருப்பைக் கொப்பளித்துக் கொண்டு..... தொம்.... தொம்.... என நிலம் அதிரும்படி ஓவியனது வீட்டை சென்றடைந்தது. நகனின் வருகையால் வீடு உடைந்தது. நகன் கொப்பளித்த நெருப்பினால் ஓவியங்களும், உடைந்த வீடும் எரிந்து போயின. ஓவியன் நகனைப் பற்றி வளர்த்திருந்த கருத்து பிழையானது என அறிந்து கொண்டான்... அதனால் ஓ.... எனக்கத்திக் கொண்டு அந்த இடத்தைவிட்டு ஓடினான். கதையைக் கூறிமுடித்த தாத்தா குமரனைப் பார்த்துக் கேட்டார்.

குமரா... ஏன் ஓவியன் தனது இடத்தைவிட்டு ஓடினான்?

என்ன தாத்தா.... இது கூடத் தெரியாதா!! பால் வெண்மையானது. சீனி இனிக்கும். உப்பு உவர்க்கும். நகன் நெருப்பைக் கொப்பளிப்பதால் நகன் எரிக்கும் என்பது தானே நகனுடைய தன்மை, இதை அறியாமல் இருந்தது ஓவியனது தவறு எனவே அவன் ஓடினான். என்றான் சிரித்தபடி குமரன்.

தாத்தாவும் சிரித்தபடி "குமரா நித்திரை கொள்ளடா" என்று கூறியபடி குமரனின் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

முற்றும்.

www.tamilarangam.net



# கடிதங்கள்

அன்புடன் ஆசிரியர்குழுவிற்கு.

சென்றமாத இதழ் (10) "கடிதங்கள்" பகுதியில் "HOLSTEBRO ரகு" என்பவரின் கருத்தை வெளியிட்டிருந்தீர்கள். அவர் மீராவின் சிறுகதையை "பிரச்சாரம்" என்றும், நமக்குத்தேவை டென்மார்க்கிலுள்ள மற்ற சமூகங்கள் எப்படி வாழ்கின்றனர் என்பதை அறிவதுதான் முக்கியம் என்று எழுதியிருந்தார். அது தொடர்பாக எனது கருத்தை எழுதுகிறேன்.

திரு மீராவின் கதை தமிழர் மத்தியில் ஆழவேரூன்றியுள்ள "சாதிவமைப்பை" வைத்தே எழுதப்பட்டது. இப்பிரச்சனை நாடு தாண்டியும் தொடர்ந்துவரும் "புற்றுநோய்" போன்று தொடரும் ஒரு வியாதி. மற்ற சமூகங்களிடம் காணப்படாத "மிகச்சிறப்பு" இந்துக்களுக்கு (தமிழர்களுக்கு) உண்டு. மற்ற சமூகங்கத்தைப் பார்த்து திருந்த வேண்டும் என்ற நோக்கத்தில் தான் திரு. மீரா அச்சிறுகதையை எழுதியிருக்க வேண்டும், என நினைக்கின்றேன்...... மற்றும் இது எவ்விதத்திலும் "பிரச்சாரம்" அல்ல. எமது சமுதாயம் எப்போதும் பிரச்சனையிலிருந்து நழுவுவதிலே தான் கண்ணாக இருந்துள்ளது. இந்த நழுவும் போக்கைத்தான் மீரா நன்றாக அம்பலப்படுத்தியுள்ளார்.

மற்றும் இலக்கியம் என்பது உண்மைக்குப் புறம்பானதல்ல, ஆகவே உண்மைக்குப் புறம்பாக எழுதுவதும் கலை, கலைக்காக என்பதும் மரணித்துப் போன ஒன்று. அவற்றிற்கு மாறாக சமூகத்தில் நடப்பவைகளை பிரதிபலிப்பதும், அதன்

www.tamilarangam.net



மூலம் மக்களை சிந்திக்க வைப்பதும் தான் உண்மையான இலக்கியம். அவ்வகையில் மீராவுக்கு இது ஓர் வெற்றிதான். திரு. மீராவின் சிறுகதையை வெளியிட்ட சஞ்சீவியின் "துணிச்சலுக்கும்", எழுதிய திரு மீராவுக்கும் எனது பாராட்டுக்கள். வாழ்த்துகள் .

அன்புடன்
T. சௌந்தர். KOLDING.

அன்பின் சஞ்சீவிக்கு!

உங்கள் இலக்கியப்பணிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். வெளிதேசத்தின் துருவக் குளிரின் மணத்திலும் சஞ்சீவியின் தமிழ் மணம் சிரஞ்சீவியாக வாழட்டும்.

நன்றி.

அன்பின் வாசகன்
கந்துக்குட்டி.

பத்திரிகையின் வளர்ச்சிக்கு விமர்சனங்கள் இன்றியமையாதவை. எனவே வாசகர்களாகிய உங்கள் கடிதங்களை மிகவும் ஆவலாக எதிர்பார்க்கின்றோம். இருந்தும் மலர் 11 பற்றிய உங்கள் கருத்துகள், விமர்சனங்கள் இம் மலரில் இடம் பெறவில்லை. மலர் 13ல் வெளியிடப்படும். என்பதனை அறியத்தருகின்றோம்.

- சஞ்சீவி -

www.tamilarangam.net



# எனக்காக அழவேண்டாம்

எனக்காக அழவேண்டாம்
இன்று ஒரு ஊதாரிப்பயல் இறந்துவிட்டான்

அவனுக்காக யாரும் அழவேண்டாம்
அவனுக்காக அழவேண்டும் போல் இருந்தால்

நன்றாக அழுங்கள் ஓவென்று கதறி அழுங்கள்
ஆனால்
அவனுக்காக அழுகின்றேன் என்று
யாருக்கும் சொல்லாமல் அழுங்கள்.

யாருக்காக அழுகின்றாய் என்று யாரும்
கேட்டால்,
ஈழ தேசத்தில் நீதிக்காக உயிர் விட்ட
ஒரு
முகம் காணாத போர்வீரனுக்காக
அழுவதாய் சொல்லுங்கள்

எனக்காக அழவேண்டாம்
உங்கள் கண்ணீரிற்கு நான் அருகதையற்றவன்.
எனக்காக யாரும் அழவேண்டாம் ஏனென்றால்
எனது தப்பிற்கு
எனது ஆத்மா இன்னும் அழுது கொண்டேயிருக்-
-கின்றது

ஆகவே எனக்காக அழவேண்டாம்.

- கத்துக்குட்டி -

www.tamilarangam.net



# இறக்குமதி




சிறுகதை- லாவா

யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் இருந்து வரும் மாணவிகளின் இரைச்சலைக் கேட்ட வண்ணம் மல்லிகைப் பந்தலின் கீழிருந்து இராமாயணம் படித்துக் கொண்டிருக்கிறாள் ஷம்மி. ஆனால் அவள் மனமோ சரித்திரத்தில் ஒன்றவில்லை. கண்களோ அடிக்கடி சாலையில் விரைந்துச் செல்லும் பேருந்துகளைப் பார்த்த வண்ணம் இருந்தன. இதோ! அவளது எதிர்பார்ப்பு காரில் வந்து இறங்குகின்றாள்.

"Hej Shammi! Hvordan har du det?" என்று கேட்டுக் கொண்டே வருகின்றாள் ரீனு.

இருபத்தைந்து வயது நிறைந்த ஷம்மியும் ரீனுவும் உடன் பிறந்த இரட்டைச் சகோதரிகள். தம் பெற்றோருடன் பதினைந்து வருடங்-

www.tamilarangam.net



களாக டென்மார்க்கில் வாழ்ந்தவர்கள். இவ டென்மார்க்கில் "பொலிற்றிக்கன்" பத்திரிகை நிருபராகவும், ஹெமிலி கட்டிடக் கலைப் பாடசாலையில் இறுதியாண்டு மாணவியாகவும் இருந்த போது டென்மார்க்கை விட்டு ஆறு மாதங்களுக்கு முன் இருவரின் திருமணவிடயமாக இலங்கைக்கு வந்திருக்கிறார்கள்.

இவவைக் கண்டதும் ஹெம்லிக்கு ஒரே ஆனந்தம் கூடவே ஆச்சரியம் காரணம் இவ காரில் வந்து இறங்கியதும் அந்நேரம் டென்மார்க்கில் இருந்த இவவாக இருந்ததும். உடையில் செழுங்காலுக்கு மேலே அணிந்த இறுக்கமான பாவாடையும் வெப்பமான அல்லது கோடை காலத்தில் அணியும் சிறிய மேலாடையும் அணிந்திருந்தாள்.

"என்னடி இது டென்னிஷில் கதைப்பது, தமிழ் வராதோ" என்கிறாள் ஹெமிலி. "வருமே" என்றவாறு ஹம்லியை அணைத்து கன்னத்தில் கன்னம் வைத்து முத்தமிடுகின்றாள் இவ.

இவ சுதந்திரம் + நாகரீகப் பிரியை. டென்மார்க்கை விட்டு வந்தாலும் இலங்கை நிருபராக பொலிற்றிக்கன் பத்திரிகையில் எழுதிக் கொண்டு தான் இருக்கின்றாள். "டிக்மன்ஸ் றோட்" கொழும்பு - 4 இல் ஒரு அறை + சமையல் அறை கொண்ட வீடொன்றை வாடகைக்கு எடுத்து கார் போன்ற சகல வசதிகளுடனும் தனியாக வாழத் தொடங்கிவிட்டாள். ஹம்லியோ இவவுக்கு எதிர்மாறு கெம்பப் பாங்கு எனக் கூறுவார்களே அப்படிப் பட்டவள். "யாழ் வேம்படி வீதியில் தாய் தந்தையுடன் வாழ்கின்றாள்.

www.tamilarangam.net



எங்கே அம்மா அப்பாவைக் காணவில்லை? எதுக்காக என்னை வரச் சொல்லி "போன்" பண்ணினாய்? - நீரு.

"கோயிலுக்குப் போயிட்டாங்க... அது சரி கொழும்பில் இருந்து இவ்வளவு தூரமும் தனியாகவா கார் ஓட்டி வந்தாய்?" என்றவாறு உட்புறம் நோக்கி நடக்கிறான் தம்பி. நீரு பின் தொடர.

சகோதரிகள் இருவருமே நண்பிகள் போல தங்கள் கொழும்பு, யாழ்ப்பாண அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள். ஆனால் நீரு-வை வரவழைத்த காரணத்தை தம்பி இதுவரையிலும் கூறவில்லை.

மிக்கேலைப் பற்றி தம்பி கேட்ட போது, நீரு சில கணங்கள் மௌனமாக இருந்து விட்டு கண்கள் கலங்க அவனைப் பற்றித் தான் அறிந்த விடயங்களைக் கூறி முடிக்கிறாள்.

மிக்கேலும் நீருவும் டென்மார்க்கில் ஒரே பத்திரிகைக் காரியாலயத்தில் ஒன்றாக வேலை செய்தார்கள். மிக்கேல் இருபத்தியேழு வயதே கொண்ட நல்ல தோற்றம் உள்ள அழகிய டெனிஸ் வாலிபன். எத்தனையோ பெண்களிடம் அலைந்து இறுதியில் நீருவிடம் வந்து சேர்ந்தான். இருவரும் ஒருவரையொருவர் விரும்பினார்கள். நீருவிடம் அவன் உண்மை அன்பைக் கண்டான். எவ்வளவு தான் நாகரீகமாக இருந்தாலும் ஒருவனையே காதலித்து அவனையே மணம் செய்து வாழ வேண்டும் என்ற எண்ணம் படைத்தவள் நீரு. அவளைப் புரிந்து கொண்ட மிக்கேல் இந்துமா சமுத்திரத்தில் முத்துப் போல ஜொலிக்கும் நீருவின் தாய் நாட்டில் தான் வாழவேண்டும் என்றும் இணை-பிரியாமல் வாழலாம் என இணைந்து இரு-

www.tamilarangam.net



வரவே அங்கு சென்று திருமணம் செய்து வாழ்வதென முடிவு செய்தனர். றீற்றாவும் அதற்குச் சம்மதித்தாள். றீ முதலில் இலங்கை வந்து சில முக்கிய பிரச்சனைகளுக்கு முடிவு எடுத்ததும் பின்பு மிக்கேல் வந்து சேர்வது என திட்டமிட்டனர். அதன் பலனாய் றீ, தாய் தந்தை சகோதரியுடன் இலங்கை வந்து சேர்ந்தாள். கொள்ளுப்பிட்டி "பெர்னீக் கேசன் மேட்டுர்" ஓர் அழகான சிறிய வீடும் காரும் வாங்கினாள். மிக்கேலுக்காகக் காத்திருந்தாள். ஆனால் அவன் வந்து சேரவில்லை.

மாதங்கள் மூன்றானது கடிதங்கள் + தொலை பேசி என இருந்த உறவுகள் நின்று போனது. மிக்கேலிடமிருந்து கடிதமோ, தொலை பேசியோ வராமல் றீ வெம்பிப் போனாள். எங்கே அவன் தன்னைக் கைவிட்டு விடுவானோ எனத் தவித்தாள். பதிலுக்காகக் காத்திருந்தாள். பதிலும் வந்தது பெரும் இடியுடன். மிக்கேலிடமிருந்து வந்த அந்தக் கடிதத்தில் தான் முன்பு பழகிய யாரோ ஒரு பெண்ணின் மூலம் தன் உடலில் "எய்ட்ஸ்" கிருமிகள் கடத்தப்பட்டு விட்டது என்பதை வைத்திய பரிசோதனை மூலம் அறிந்ததையும், தான் இன்னும் ஆறாண்டு அல்லது ஏழாண்டு காலம் தான் உயிர் வாழ முடியுமென வைத்தியர்கள் கூறி விட்டார்களெனவும் தான் வாழும் காலம் வரை றீயுடனேயே வாழ விரும்புவதாயும், றீ சம்மதித்தால் அடுத்த விமானத்திலேயே வருவதாகவும் எழுதியிருந்தான். றீ தவித்துப் போனாள், எங்கே தனக்கும் "எய்ட்ஸ்" கிருமிகள் கடத்தப்பட்டிருக்குமோ எனப் பயந்தாள். ஆனால் தொடுவதாலோ, முத்தத்தாலோ கடத்தப்படுவதல்ல "எய்ட்ஸ்" என்பது

www.tamilarangam.net



எண்ணியதும் அவள் மனம் அமைதி கொண்டது. மிக்கேலை மறக்க முடியாமல் தவித்து எத்தனையோ நாட்கள் யோசித்து இறுதியில் அவனை இலங்கை வரவேண்டாம் எனவும், தன்னை மறக்கும் படியும் எழுதிவிட்டு வாங்கிய புது வீட்டை விற்று விட்டு தனக்கென ஒரு அறையை "டிக்மண்ட் ரோட்டில்" வாங்கி தனியாக வாழத் தொடங்கிவிட்டாள்.

நீரு சொன்னவற்றை மௌனமாகக் கேட்ட ஷம்மி அழுகின்றாள். ஷம்மி ஏன் அழுகின்றாள் என நீரு வியப்புகின்றாள்.

" ஷம்மி... நீ ஏன் அழுகின்றாய், அழ வேண்டிய நானே அமைதியாக இருக்கின்றேன். மிக்கேல் இங்கே வந்தால் எனக்கு மட்டுமில்லை இந்த நாட்டிற்கே ஆபத்து."

" இல்லடி நீரு, மிக்கேல் தான் நம்ம நாட்டிற்கு "எய்ட்ஸ்" கொண்டு வாரான் என்று இல்லை. நம்ம நாட்டிற்கு எப்பவோ வந்தாச்சு. அதைவிட நம்ம நாட்டுக்காரர்கள் எத்தனையோ பேர் உள் நாட்டிலும் இன்றும் வெளிநாடுகளிலும் MARI HUANA HERION எனப் பாவித்துக் கொண்டிருக்கிறார்களே. அவர்கள் என்னத்தையடி கொண்டு வருவாங்க, எய்ட்ஸ் தான். காரணம் அவங்க உடம்பிலே எதிர்ப்புச்சக்தி குறைந்திருக்கும் வேளையில் தகாத பெண்களுடன் உறவு கொள்வதாலும் ஊசி மூலம் போதை மருந்துக்கள் ஏற்றுவதனாலும் தங்களுடைய உடலை தாங்களே நாசம் பண்ணுகிறார்கள். உதாரணமா என்னையே எடுத்துக் கொள். என் உடம்பிலும் "எய்ட்ஸ்" கிருமிகள் வந்தாச்சு."

ஷம்மி... என்னடி சொல்கிறாய் எனக் கேட்டு.

கிறாள் நீரு -

தனக்கு அடிக்கடி சில நாட்களாக உடலில் பல மாற்றங்கள் எடை குறைவு உடல் அங்கங்கள், கை, கால் நடுக்கம் தொடர்ச்சியான இருமல் ஆகியன இருந்ததனால் தனியார் மருத்துவ மனைக்கு சென்று காட்டிய போது தனக்கு "எய்ட்ஸ்" தொற்றி விட்டதாக வைத்திய பரிசோதனை மூலம் அறிந்ததையும் இன்னும் ஒரு வருடத்துள் தான் இறந்து போய் விடுவேன் எனவும் கூறி முடிக்கிறாள் ஹம்பி.

நீரு இருந்த இடத்தை விட்டு அசையாமல் அழுது கொண்டிருக்கிறாள். அழுது முடிந்த பின் மெதுவாக "ஹம்... ஹம்பி இதைச் சொல்லவா என்னை வர அழைத்தாய். என்னிடம் எதுவும் மறைக்காதே, எப்படி உனக்கு இந்த நோய் வந்தது? உனக்கு டென்மார்க்கில் ஏதாவது தப்பான ஆண்களுடன் உறவு இருந்ததா?" எனக் கேள்விக் கணைகளை அடுக்கின்றாள்.

"இல்லடி... இல்லவே இல்லை" என்று பெரிதாகக் கத்தி விம்மி, விம்மி அழுகின்றாள். அவள், அழுதை முடியும் வரை காத்திருந்த நீரு "kom nu சொல்லடி.... அப்போ எப்படித்தான் இது வந்தது?" சில நிமிடங்கள் மௌனம்.

"எனக்கு ஐந்து வருடங்களுக்கு முன் நடந்த அறுவைச் சிகிச்சையைப் பற்றி உனக்கு ஞாபகம் இருக்கா? அப்போது எனக்கு ஏற்றப்பட்ட இரத்தத்தின் மூலம் HIV (இது மனிதனின் நோய் தடைக் காப்பைக் குறைத்திடும் நோய் நுண்மம். அதுதான் "எய்ட்ஸ்" இற்கு) என் உடம்புக்கு கடத்தப்பட்டு விட்டது. இன்னுஞ்சிறிய

www.tamilarangam.net



அந்தக் கிருமி என் உடம்பில் ஐந்து வருடங்களாக இருந்து இப்போது பல்கிப் பெருகிவிட்டது. அதன் காரணமாகத்தான் நான் நாலு மாதமாகக் காய்ச்சல்பட்டு இப்போ தற்காலிகமாக மருந்து எடுக்கிறேன். ஆனால் இந்த மருந்தும் எவ்வளவு நாளைக்கு இன்னும் கொஞ்ச நாளுக்குத் தான் என் வாழ்வும்" என்கின்றான் அம்பி.

நீலா எதுவும் பேசவில்லை. எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருக்கிறாள். அவளும் எத்தனையோ புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் வாசித்திருக்கின்றாள். இரத்தம் ஒருவர் உடலில் இருந்து மற்றவர் உடலுக்கு நோய்ப் பரவலினையும் HIV (Human Immunodeficiency Virus) கடத்தப்படுகிறதென. இந்த HIV நோயைத் தடுத்து நிறுத்துவதற்கென உடல் உற்பத்தி செய்யும் இரத்தத்தின் வெள்ளையணுக்கள் உட்பட முக்கியமான உயிரணுக்களைத் தாக்கி அவற்றை செயலிழக்கச் செய்கிறது. இதன் பலனாய் "எய்ட்ஸ்" உடலில் பெருகி, இறுதியில் மரணம் சம்பவிக்கிறது.

அன்று அந்த வைத்தியரின் கவனக்குறைவால் அம்பிக்கு ஏற்றப்பட்ட இரத்தம் ஒழுங்காக பரிசோதனை செய்யப்படவில்லை. அம்பியைப் போல் இன்னும் எத்தனை பேருக்கு இப்படி நடக்கிறதோ என நீலாவின் மனம் எண்ணுகிறது

" ஆ.... மிக்கேல் Min skat... உன்னுடைய பிழையால் நீ இந்தப் பயங்கர நோயைக் கடத்தப் பெற்றாய், அதனால் அம்பி- ......"

-முற்றும்-

www.tamilarangam.net



# புதுமை செய்வோம்

- ஜெரனி. Holstebro.

என்றைக்கும் புதுமை செய்வோம்
அதை
இன்றுமுதலென்று செய்வோம்....

இரவுகளை விடியச் செய்வோம்
அந்த
ஞாயிற்றை வரவும் செய்வோம்....

வயிறுகள் நிரம்பச் செய்வோம்
வந்த
சிறுசுகளை வளரச் செய்வோம்....

என்றைக்கும் புதுமை செய்வோம்
சொந்த
ஏழ்மையில் நற் புரட்சி செய்வோம்....

இன்றுமுதலென்று செய்வோம்
காய்ந்த
பாலையில் பசுமை செய்வோம்....

சிந்தைகள் குளிரச் செய்வோம்
சிந்து(ப்)
பாடலில் பயிர்கள் செய்வோம்....

புதிய பல புகழ்ச்சி செய்வோம்
பந்த
பாசங்கள் பெருகச் செய்வோம்....

நெஞ்சங்கள் நெகிழச் செய்வோம்
நொந்த
நம் நாட்டிலே வளர்ச்சி செய்வோம்....

என்றைக்கும் புதுமை செய்வோம்
அதை
இன்றுமுதலென்று செய்வோம்!!

www.tamilarangam.net



## NØDHJÆLP TIL NORD- OG ØST SRI LANKA

## NU STARTER INDSAMLINGEN

Sammenslutningen af Tamilsk Danske Venskabsforeninger i Danmark starter nu en indsamling af penge til nødhjælp, som skal uddeles til befolkningen i de borgerkrigsramte områder i Nord og Øst Sri Lanka. Indsamlingen foregår i samarbejde med Folkekirkens Nødhjælp.

Sammenslutningen af Tamilsk Danske Venskabsforeninger er et nyt samarbejde, som har været under forberedelse gennem det sidste halve år. Formålet med sammenslutningen er at yde råd og vejledning til de enkelte lokalforeninger rundt i hele Danmark. Nødhjælps-indsamlingen er det første udadvendte initiativ fra sammenslutningens side.

Efter flere måneders forholdsvis fredelig udvikling skete det ulykkelige, at borgerkrigen brød ud igen den 11. juni 1990. De voldsomme krigshandlinger har terroriseret den almindelige befolkning i hele Nord- og Øst Sri Lanka. Ofrene for krigen er både tamilere, muslimer og singalesere Flere tusinde civile er dræbt, mange tusinde boliger og marker er brændt af og ødelagt og over én million indbyggere har måttet flygte til andre dele af

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Sri Lanka eller til Indien.

Rapporter fra Sri Lanka oplyser, at der er hårdt brug for al den hjælp, vi kan indsamle. Og mange har efterlyst metoder til at få hjælpen sikker frem, uden at den bliver konfiskeret af hæren, tigrene eller på anden vis falder i de forkerte lommer.

Vi har derfor kontaktet forskellige hjælpe-organisationer, og vi mener, at Folkekirkens Nødhjælp via deres samarbejde med World Councils of Churches i Geneva har meget troværdige kontakter på Sri Lanka.

Deres lokale kontakter på Sri Lanka er den tamilske biskob D.J. Ambalavanar i Jaffna (han er tilknyttet den sydindiske protestantiske kirke ), The National Christian Council of Sri Lanka og The Refugees Rehabilitation Organisation.

Disse kontakter modtager penge fra bl.a. Folkekirkens Nødhjælp. For pengene køber de fødevarer og andre nødvendige forsyninger i Colombo og sender hjælpen med lastbil-konvojer til områderne i nord og øst. Og løbende rapporter fortæller, at hjælpen faktisk kommer frem.

Når hjælpen er nået frem, fordeles den til alle i området, som har behov for hjælp uanset om de tilhører den ene eller anden kirke, religion eller befolkningsgruppe.

Fort Sæt Side: 32

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


BUTIK - ASSISTENT SØGES

Til BUTIK UNIK i KULTURHUSET søges en ny butik-assistent den 1 januar og 3 måneder frem.
Arbejdet omfatter salg af varer fra butikken, salg af fotokopier fra kopimaskinen, pasning af vaskemaskinen og tørretumbleren.
Butikassistenten skal også hjælpe med udlån af værk-tøj, boremaskine, skrivemaskine, symaskine og med udlån af bordtennisbat.

Kom og tal med klubleder Preben Kruse hvis du er interesseret i at høre mere om arbejdet.

HÅNDVÆRKER SØGES

Til KULTURHUSET søges en håndværker som kan hjælpe klublederen med det praktiske arbejde.
Håndværkeren skal lave mange forskellige slags arbejde.
For eksempel reparere møbler, skifte el-pærer, male væge og lofter, og rydde op indendørs og udendørs.

Kom og tal med klubleder Preben Kruse hvis du er interesseret i at høre mere om arbejdet.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# "5000 Km i Indien"



Med 300 lysbilled-fotos fra Indien fortæller Karen Holm og Preben Kruse om en lang tog- og busrejse fra Bombay, Mysore og Kerala til Madurai, Orissa og Delhi.

Vi besøger gæstfrie hindu-familier, og ser flotte templer og paladser. Vi ser livet blandt gadens folk og er med til religiøse ceremonier.

Tirsdag den 22 januar kl 19.30 i KULTURHUSET.

ALLE ER VELKOMNE.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Folkekirkens Nødhjælp har vundet stor respekt i Danmark gennem mange års støtte til humanitært hjælpearbejde i Afrika, Asien og Latinamerika. Det er en selvejende institution, som får sine indtægter fra private bidrag, den danske stat og fra EF. I 1989 modtog Folkekirkens Nødhjælp cirka 70 millioner kr. i private bidrag og cirka 280 millioner kr. fra staten og EF. Pengene er blandt andet brugt til at fordele nødhjælp i borgerkrigsramte lande som Mozambique, Sudan og Ethiopien samt mange andre projekter.

Vi har aftalt med Folkekirkens Nødhjælp, at vi kan benyttes deres gironummer 5 40 00 23 og girokort til indsamlingen. Vi giver alle girokort dette stempel :

**Nødhjælp til Nord- og Øst Sri Lanka**
***De tamilsk-danske venskabsforeningers indsamling via Folkekirkens Nødhjælp***

Folkekirkens Nødhjælp samler derefter alle ind-betalinger med dette stempel på en særlig konto, og alle pengene vil udelukkende blive brugt til nødhjælp på Sri Lanka. Vi kan også få en opgørelse over, hvor meget der ialt bliver samlet ind. Vi vil senere i 1991 oplyse

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



her i "Chanchive", hvor meget der er samlet ind.

Bidrag til indsamlingen på Folkekirkens Nødhjælps konto kan trækkes fra i skat. De første 300 kr. hvert år kan man dog ikke trække fra, bidrag ud over 300 kr. kan trækkes fra - dog maksimalt 1000 kr. hvert år. (Husk at gemme girokviteringerne til skattevæsenet ! )

Vi opfordrer alle til at støtte indsamlingen med et beløb i december måned. Men vi fortsætter indsamlingen også efter nytår. Indsamlingen kan være en god anledning for de lokale tamilske foreninger og venskabsforeninger rundt i landet til at komme i kontakt med flere danskere og oplyse om forholdene på Sri Lanka og få støtte til indsamlingen. Der kan for eksempel afholdes offentlige indsamlings-fester, hvor overskuddet går til nødhjælp. Og man kan gå til den lokale presse og fortælle om indsamlingen, baggrunden for den og lokale initiativer.

Vi indlægger ét girokort i dette nummer af "Chanchive". Har du brug for flere girokort, så send et brev med dit navn og adresse til "Chanchive", Danmarksgade 10, 7500 Holstebro.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Skriv hvor mange girokort, du har brug for, så skal vi sende dem til dig.

Vi ønsker alle god held med indsamlingen. Der er hårdt brug for al den hjælp, vi kan skaffe.

Per Daugbjerg
Holstebro

JESUS KOMMER...

Jesus kommer- vores
Jesus kommer!
Verden bliver lys og god
Nye tider og nye lande!


Vi siger tak Jesus
Fodi han kommer her
han gi´r mening i livet
For os en Fader er!

Jesus går her på jord
Han går på gade og torve
I små huse og høj hus bar han
Han elsker enhver!


Jesus kom til Jord
Så alle folk må lære
At dele med hinanden
Så ingen for det svært!!

Jesus kommer- vores
Jesus kommer!!!

-VASANTHIA.



# அக்னி காண்டம்



உன்னை ARTSக்கு விட்டனை. ஒரு வருஷம் பிந்தினாலும் பரவாயில்லை. நீ திரும்பவும் எட்டாம் வகுப்பிலை படி.

மகள் இப்ப Advancelevel முடிச்சிட்டு LONDON EXAM ஒண்டுக்காக படிக்கிறா. அது தான் நான் வீட்டு வேலை ஏதும் செய்விக்கிறதில்லை.

வாத்தியார்! உவனை உரிச்சு எண்டாலும் S.S.C பாஸ் பண்ண வையுங்கோ.

தரகர்! டொக்டர் எண்ட தாலை எப்படியும் 5. 6க்கு குறையாமல் வேண்டலாம் தானே.

கை வேலை படிக்கிறானாம் கைவேலை.
பிறகு இதைப் படிச்சு நீ என்னடா
தச்சு வேலையே செய்யப் போறாய்.

www.tamilarangam.net



சீதையிடம் தோற்றது.
சரஸ்வதியைப் பழிவாங்கிவிட்டது.
நடந்தது இலங்கையில் தான்.

இங்கு புடம் போடப்பட்டவர்களை விட
பொசுக்கப்பட்டவர்களே அதிகம்.

இறந்து போன நிலவுடமையின் ஆவியொன்று
பள்ளிக்கூட வாசலில் நின்று
பற்றிக் கொள்ள ஆரம்பித்தது.

உடையார்கள் இருந்த இடத்தில்
sin α வும் cos α வும் நின்று
ஆட்சி செலுத்தத் தலைப்பட்டன.

விஞ்ஞானப் பிரிவு கலைப் பிரிவு
சாதிப் பிரதிஷ்டை செய்தது.
கூடவே.
பாராளுமன்ற பதிவுத்தின்களிலாதும்
பறக்கத் துடித்த பெற்றோரின் ஆசைகளும்
கிளித்தட்டு மறிக்கப் புறப்பட்டதால்
காய்க்க பழமானவர்கள் மாணவர்களே.

பள்ளிக்கூட வேலிகளுக்குக் "கதியால் வெட்டு"
என்பதே இல்லை.
காரணம் மாணவமணிகளின் முதுகு அறிவும்
அதற்கு!
கைத்தாளமிட்ட பெற்றோரின் மனது அறிவும்
எதற்காக இதைஸ்வோம்?
இலட்சணம் இல்லாத எல்லாத்தையும்
இலட்சங்களுக்கு விற்பதற்காகவே.

நடந்தது என்ன? தப்பித்தன இரண்டொன்று.

அரங்கேற்றத்துக்கு நாள் குறித்துவிட்டு
காலில் சலங்கைகளைக் கட்டிக் கொண்டன.
கையில் வயலினை எடுத்துக் கொண்டன.

அற்வான்ஸ் லெவலில் அடி சறுக்கியவை எல்லாம்
ஆளுக்கொரு பையுடன் I C M A செய்யப் புறப்பட்டதனால்
பையன்களுக்கிங்கே தட்டுப்பாடு வந்தது என்னமோ
பூபாலசிங்கம் புக்டிப்போவுக்குத் தான்.

இதை
எட்டாம் வகுப்பு N.P.T.A விலேயே
தீர்மானித்திருக்கலாம்.

முடிவு......

கொலரை உயர்த்தப் புறப்பட்டுக்
கழுத்தையே வெட்டிக் கொண்டோம்.
மற்றவனை மிதிக்க உயர்த்திய கால்களெல்லாம்
மீண்டும் மண்ணை மிதிக்க முடியாத நிலைக்கு
தள்ளப்பட்டு விட்டன.

- பகுதி I முற்றிற்று -

தொடரும்

நாம் இம்முறை பிரசுரித்த (பகுதி I) 7ம் பாகம் வரை முன்பு "குவிலேனை"யில் பிரசுரமானது வாசகராகிய நீங்கள் அறிவீர்கள்.

தொடர்ந்து மீரா அவர்கள் எமது சமுதாயத்தைப் பற்றிய அவரது பார்வையை மீண்டும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள "சஞ்சீவி" மலர் 13 இல் வருகிறார்.

www.tamilarangam.net



# பூமியே!!

வருடாங்கள் பல புரட்டிவிடும் பூமியே
உன் வயது தான் எத்தனை?

வருத்தங்கள் பல புகட்டிவிடும் இலங்கையே
உன் வயசுதான் அதில் எத்தனை?

வாழ்ந்த மக்கள் பல கோடி இலங்கையில்
உன் பசி தீர்த்தோர்தான் எத்தனை?

விரதப் பசி ஆற நிற்கும் பூமியே
உன் பசி தீர்க்கும் ஆண்டுகள்தான் எத்தனை?

விட்டலைப் பறந்து செல்லும் சிறார்களுக்கு பூமியே
உன் ஆறுதல்தான் கிடைத்திடுமா எம் நாட்டினிலே?

வீரமாகச் சிறகடித்த எம் ஆசைகளைப் பூமியே
உன் விலங்குகளால் பூட்டிவிட்டாய் எம் நாட்டினிலே.

இரா. பாஸ்கரன். 8370 Hadsten



ஒருவர்:- "இந்தப்பக்கம் பொலிஸ்காரர் யாரையாவது பார்த்தீர்களா"



மற்றவர்:- "இல்லை"

ஒருவர்:- "அப்படியானால் சீக்கிரம் மணிபர்ஸை எடு"

www.tamilarangam.net



# ஐக்கிய ஐரோப்பா

பிறேம்
-Herning-

இன்றைய உலகநாடுகளை அவதானித்துப் பார்க்கும் போது அதுவும் குறிப்பாக மூன்றாம் உலகநாடுகளைப் பார்க்கும் போது நாட்டுக்கு நாடு நிலந்திற்காக போர் முளக்கத்துடன் நாட்டின் எல்லைகளில் இராணுவத்தைக் குவித்து வரும் இந்த வேளையில் எவ்வளவோ பெருந்தொகையை இராணுவத்துக்காக செலவிடும் இவ்வேளையிலும் ஐரோப்பியாவிலுள்ள 12 நாடுகள் ஒன்று சேர்ந்து ஒரு கொடியின் கீழ் சகோதரத்துவத்துடன் இயங்க முடிவு செய்துள்ளது. இதுவே சமாதானத்தின் விடியலாய் அமைய ஆரம்ப கட்டம் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

கிட்லரின் [Hitler] இரண்டாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து மேற்கு ஐரோப்பிய நாடுகள் வெறுத்தாலும் ஐரோப்பிய நாடுகளிடையே நெருங்கிய தொடர்புகள் வந்தபோதும் இன்று அந்த நெருக்கம் மேலும் வளர்ச்சியடைந்து ஒரு கொடியின் கீழ் செயற்பட தீர்மானித்திருப்பது ஐரோப்பிய நாடுகளின் வளர்ச்சிக்கு மேலும் உறுதுணையாகவே இருக்கும்.

பெல்ஜியத்தில் அமைந்துள்ள ஐரோப்பா பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கின்ற இங்கிலாந்து, பிரான்ஸ் மே. ஜேர்மனி பெல்ஜியம், ஸ்பெயின், கொலண்ட், டென்மார்க் இத்தாலி, கிறீஸ் போர்த்துக்கல், சுவிஸ், லக்சம்பேர்க், என்ற இந்த 12 நாடுகள் சேர்ந்து இன்று பொருளாதாரத்தில் ஒரு ஸ்திரமான நிலையை பல பாரிய திட்டங்களை நிறைவேற்றி செயற்பட்டு வருகின்றார்கள்.

இப்படி ஒன்று சேர்ந்து இந்த 12 நாடுகளையும் ஐக்கிய ஐரோப்பா என்று அழைக்கின்றார்கள். இந்த ஐக்கிய ஐரோப்பா

www.tamilarangam.net



வளர்ச்சி அடையும் பட்சத்தில் அதுவே உலகில் ஆகக் கூடிய சக்தியாக (Super Power) உருமாறி இன்று உலகத்தில் அதி வல்லரசுகளாக இருக்கும். அமெரிக்கா சோவியத்தின் பலத்தைக் குறைக்கவும், இந்த ஐக்கிய ஐரோப்பாவே உலகத்தில் ஒரு புது சக்தியுடன் செயல்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு இந்தப் புதிய சிந்தனையை ஆக்கபூர்வமான கொள்கையாக ஏனைய நாடுகள் ஏற்றுக் கொண்டு இந்த இலக்கை அடைய பல வருடங்கள் எடுக்கலாம்.

இந்தப் புதிய சிந்தனையின் ஆரம்ப கட்டமாக நாடுகளுக் கிடையே இருக்கும் எல்லைகளின் பரிசோதனைகள் (Custams) அகற்றப்பட்டு ஒரு நாட்டில் உருவாகும் பொருளை எவ்வளவு கெதியில் சந்தைப்படுத்த முடியுமோ அவ்வளவு கெதியில் சந்தைப்படுத்துவதற்கு ஏற்ற வழிமுறைகளை, திட்டங்களை, இந்த ஐக்கிய ஐரோப்பா 1992ம் ஆண்டில் செய்ய முடிவு செய்துள்ளது.

இந்த திட்டங்கள் பற்றியும் அதன் செயற்பாடுகள் பற்றியும் பல பெரிய தொழில் நிறுவனங்கள் மிக அவதானமாக அவதானித்து வரும் இவ்வேளையில் இதற்கான ஆரம்பகட்ட வேலைகளையும் செய்ய ஆயத்தமாகியுள்ளார்கள். இதன் மூலம் பொருளாதாரத்தில் ஒரு அசைக்க முடியாத நிலையை அடைய முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்படி 12 நாடுகள் சேர்ந்து ஐக்கிய ஐரோப்பாவாகச் செயற்படும் வேளையில் 12 நாட்டின் 12 விதமான காசுகள் புழக்கத்தில் இருந்தால் அதுவும் நாணயப் பெறுமதி ரூபத்தில் பல சிரமங்களை ஏற்படுத்தும் என்று கருதியே E.C.U (Europian, Curenagey unite) என்ற புதிய காசையும் உருவாக்கியுள்ளார்கள். இந்தக் காசு மக்கள் புழக்கத்திற்கு வர இன்னும் 4-5 வருடங்கள் செல்லலாம், என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐக்கிய ஐரோப்பாவின் பாதுகாப்பையும் Europien army என்ற பொது அமைப்பின் கீழ் கொண்டு வரும் முய-ற்சிகள் செயற்பட இருக்கும் இவ்வேளையில், இதற்கு இன்னும் சிறிது காலம் இந்தக் கூட்டு முயற்சியுடன் முன்னேறினால் இது சாத்தியமாகும் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள்.

இந்த நாடுகளின் ஒற்றுமை எமக்கு சந்தோசத்தைத் தந்தாலும் அரசியல் தஞ்சமடைந்த எமது மக்களுக்கு என்-ன முடிவு என்று இன்னமும் ஒரு திடமான முடிவு எடுக்கப்-படவில்லை, இது பற்றி ஐரோப்பா பாராளுமன்றத்தில் இப்போது பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றது. முடிவுகள் எமக்கு சாத-கமாக இருக்கும் என நம்புவோம்.

:- முற்றும் :-

7. உலகில் இறந்தவர்களின் மனித எலும்பு-களை வேறு நாடுகளுக்கு அதிகமாக ஏற்றுமதிசெய்யும் நாடு எது ?

8. இலங்கையின் தலைப்பகுதி"எல்லை"யின் பெயர் என்ன ?

9. இலங்கையின் தற்போதைய பாராளுமன்றம் எங்கே அமைந்துள்ளது ?

10. உயிர் எழுத்துக்கள் எத்தனை ? அவை யாவை ?

பதில்கள்;

1. கிட்டத்தட்ட 9 மீற்றர் .

2. இலங்கை .

3. 1887--1889.

4. பாம்பு .

5. காங்கேசன்துறை .

6. அலுமினியம் .

7. இந்தியா .

8. பனைமுனை .


9. ஜெயவர்த்தனபுரம் .

10. 12, அ,ஆ,இ,ஈ,உ,ஊ,எ,ஏ,ஐ,ஒ,ஓ,ஔ .

www.tamilarangam.net



# உன்னையே நீ....



- பிரேம் -

"இந்த அப்பா" இவன் இப்ப சரியான ஒரேயடி அதுவும் போக கடிக்கிறாள். நான் நினைக்கிறேன் நிரஞ்சனிக்கு பல்லு முளைக்கப் போகுது என்று. இங்க பிரசு கூட நடப்பா நான் அப்பா இருக்கு. இந்த அப்பா நிரஞ்சனிக்கு முதல் பல்லு முளைக்க எல்லோருக்கும் சொல்லி பல்லுக் கொழுக்கட்டை அவிப்பம் என்னப்பா!

என்னப்பா பேசாமல் இருக்கிறியள். செலவு என்றால் செவிடு மாதிரி இருப்பியளே..... அதுவும் இந்த வெளிநாட்டிலே அநாதை மாதிரி இருக்கிறவங்கள் இப்படி நல்ல நாள் பெருநாளிலாவது நாலு நல்ல சனத்தைக் கூப்பிட்டு சந்தோஷமாக இதைக் கொண்டாடுவோம் என்றால் நீங்கள் இப்படி உம் என்று கொண்டு இருக்கிறியள்... ஏன் என்று நான் தெரியவில்லை!

என்னம்மா சாந்தி.... நீர் என்ன கதைக்கிறீர். என்று யோசித்துத் தானா கதைக்கிறீர்... ஒரு பிள்ளை பிறந்தால் முப்பத்தொன்று, பல்லு முளைக்கும் போது,

www.tamilarangam.net



முதலாவது பிறந்தநாள் . என்று ஒரு வருடத்தில் மூன்று கொண்டாட்டம் என்று உறர் சனத்துக்கு எல்லாம் சொல்லி விடியபோவில் வேறு படிப்பிப்பு என்று சனங்களை பயப்பிடுத்தி ஒரு தேனீர், ஒரு - வடை . கொஞ்சம் பகோடா . என்று எங்களின் மலிவான பலகாரங்களைச் செய்து கொடுத்துப் போட்டு அன்பளிப்புகளை வாங்குவதில் என்ன நியாயம் ?

வெறும் அன்பளிப்புகளை மட்டும் நம்பி நடத்துவதற்கு பெயர் கொண்டாட்டம் இல்லை. விறாண்டல்!

உனக்கு நன்றாகத் தெரியும் போனவருடம் இப்படியான கொண்டாட்ட அழைப்பு எங்களுக்கும் எத்தனையோ வந்தபோது நாங்களே கூட வேண்டா வெறுப்பாகத்தான் அந்த அன்பளிப்புகளையே வாங்கிக் கொண்டு போனது. அப்ப இதையே இப்ப நாங்களும் திரும்பச் செய்வதில் என்ன அர்த்தம்.

கொஞ்சமாவது யோசியும் அப்பா மற்றவையள் மாதிரி பந்தாம் பகிடித்தனமா செய்வதில் என்ன அர்த்தம் இருக்கு!

சாந்தி சரி உனக்கு விருப்பம் என்றால் வாரும் பிள்ளைக்கு பல்லு முளைத்த அன்று நல்லதொரு ரெஸ்ரோரண்டுக்குப் போய் வடிவா சாப்பிட்டு சந்தோஷமாக அந்த நாளைக் கொண்டாடுவோம்! இவ்வளவு தொகையைச் செலவு செய்து நாங்கள் மட்டும் சாப்பிட்டு என்ன பிரியோசனம். யாருக்குத் தெரியப் போகுது இது?

பார்த்தீரோ சாந்தி அப்ப நீர் உறர் சனத்திற்குப் படம் காட்டத்தான் நினைக்கிறீர் தவிர பிள்ளையின் கொண்டாட்டம் உமக்கு முக்கியம் அல்ல!

ஏன் இந்த விடயத்தில் மட்டும் எல்லாப் பெண்களுமே ஒரே மாதிரிப் புத்தி! நீர் கூட ஒரு வித்தியாசமான

www.tamilarangam.net



முன்னேற்றமான சிந்தனை உள்ள பெண்ணாக இருப்-பீர் என்று பார்த்தால், நீங்கள் கூட இப்படி ஒரு சாதாரண பெண்ணாகத்தான் இந்த விடயத்தில் செயல்படுகின்றீர். பேசுகின்றீர்! எவ்வளவு நான் சொன்னாலும் உங்களுக்கு புரியுதும் இல்லை. சாதாரணமான நாலு பேர் செய்கிறது போல பிழையானது என்று தெரிந்தும் நாமும் அதைச் செய்கிறதிலை என்ன அர்த்தம். யோசியுங்கோ அப்பா! கொஞ்சமாவது.. படித்ததைப் பயன்படுத்தி...

டிங்... டிங்... டிங்.... அழைப்புமணி!..

அப்பா யாரோ பெல் அடிக்கினம் கதவைத் திற-வுங்கோ! யாராம் இருக்கும் இந்த நேரத்திலை அதுவும் முன் அறிவித்தல் ஏதும் இல்லாமல்!

ஹலோ ஹலோ...
எனது பெயர் ஜோன்
எனது பெயர் ஜோனா
இவர் பெயர் சிவா!

ஆ... கா... வாங்கோ உள்ளே போய் இருந்து கதைப்போம்... நீ...ங்...கள்.. என்ன விடயமாக வந்து....

ஒரு புத்தகம் ஒன்றை நீட்டியபடி ஜோன்!

இப்போ இந்த புத்தகம் உங்கள் சொந்த மொழியில் வந்திருக்கு இதை நீர் வாசிப்பதன் மூலம் எமது கடவுளைப் பற்றி பூரணமாக நீர் அறியலாம்... இது சம்பந்தமாக நாங்கள் உங்களுடன் சேர்ந்து உங்கள் நல்வாழ்விற்காக இறைவனை வேண்டுகின்-றோம். நீங்களும் எங்களுடன் சேர்ந்து இந்த புத்த-கங்களைப் படிப்பதன் மூலம் எமது மதம் பற்றி நீர் அறியமுடியும். அப்படி நீர் அறியும் போது ஆண்-டவர் உம்மோடு இருப்பார்...

www.tamilarangam.net



ஆ... அப்படியா... என்னை மன்னிக்கவும். நான் இந்து மதத்தில் பிறந்து இந்து மதக்கட்டுக்குள்ளேயே வளர்க்கப்பட்டு விட்டேன். அந்த மதத்தைவிட வேறு எந்த மதத்தையும் என்னால் நேசிக்க, ஆதரிக்க முடியவில்லை. அப்படி இரட்டை வேடம் ஏற்று நான் ஏன் உங்களையும் ஏமாற்ற விரும்பவில்லை!

சிறிது நேரம் மௌனத்தின் பின் சிவா தொடர்ந்தார்... எமது வாழ்க்கையின் பல காலங்களை எது வித பிரயோசனமும் இல்லாமல் வீணே கழித்து விட்டோம் இனியாவது நன்மை செய்யலாம் என்றுதான்... நான் இப்படி இவர்களைக் கூட்டிக்கொண்டு வந்தனான்!

ஓகோ... இது உமது வேலைதானா? இங்க பாரும் சிவா இந்து மதத்தில் பிறந்து இந்து மதப் பெயரையே கொண்டுள்ள நீர் ஏன் இப்படி உமது மதத்திற்குத் துரோகம் செய்கின்றீர்? அவர்களுடைய மதத்திற்கு விரும்பியும், அவர்களுடன் சேர்ந்து இப்படி மதம் என்று எங்களையும் அலைய வேண்டும் என்று தானே இப்படி எங்கள் வீட்டிற்கு வந்து போதனை நடத்துகின்றீர்?

ஏதோ ஒரு காரணத்துக்காக நீர் அந்த மதத்தை விரும்பினீர் என்றீர் அது உமது சொந்த விடயம் அத்தோடு நிற்க வேண்டியது தானே? பின் ஏன் அவர்களையும் குழப்பி எங்களையும் குழப்புகின்றீர். இது உமக்கே

ஒரு குரல் (போனில்) நாளைக்கு மாலைக்குள் ரூ. 1,500 தர வேண்டும்.
இல்லாவிட்டால் உன் மனைவியை கடத்திச் சென்று விடு -வோம்.
அவர்;- அதை இன்றே செய்யுங்கள்.

www.tamilarangam.net



நல்லா இருக்கா?

சரி உமது கருத்துப்படி இனியாவது நன்மை செய்ய வேண்டும் என்று நினைத்துத்தான் இப்படி இவர்களுடன் சேர்ந்தீர் என்றீர்! எத்தனையோ நன்மையான பல காரியங்களை நீர் உமது மதத்தில் இருந்து கொண்டே உமது மதத்திற்கு செய்து இருக்கலாமே?

நீர் எவ்வளவு இலகுவாக உமது மதத்தை விட்டு மதம் மாறினீர்? உம்மால் முடியுமானால் ஒரு வெள்ளைக்காரனை உமது மதத்திற்கு வரும்படி கேட்டுப் பாரும்? அதை அவர் ஏற்றுக் கொள்வாரா? நீர் இப்படி யோசித்து எடுக்கும் தீவிர முடிவுகளால் எல்லாத் தமிழர்களுமே கொள்கை இல்லாது வாழ்கின்றீர்கள், அவர்களை எங்கே இழுப்பிற்கு இழுக்கலாம் என்ற சிந்தனையை அவர்களுக்கு ஏற்படுத்துகின்றீர் இல்லையா?

வெள்ளைக்காரர்கள் தமது சொந்த மதத்தில் ஈடுபாடு உள்ளவரோ இல்லையோ எக்காரணம் கொண்டும் அந்த மதத்தைப் பற்றி ஏறெடுத்தும் பார்க்கமாட்டார்கள்.

மதம் என்பது மனிதனை நெறிப்படுத்தி நேர்வழிப்படுத்துவதற்கே தவிர நேர்வழியில் செல்பவனை இழுப்பதற்காக அல்ல! மதம் என்பது மனித நேயத்தை வளர்க்க வேண்டுமே தவிர இப்படி....

என்ன அண்ணை யோசிக்கிறியள் போல இருக்கு? இல்லை தம்பி சிவா, உம்மைப் போல குறைந்த வயதில் இங்கு வந்து சுயமாக சிந்தித்து ஒரு திடமான முடிவை, நீர் மனத்தை எடுக்க முடியாது இருமாறும் எத்தனையோ இளைஞர்கள் செய்யும் தவறு நான் இது பொறுத்து போக வேண்டும் என்பதற்காக தொடங்கி பின்பு ஆய்வு இருந்த நோக்காக அல்லற்படும் எத்தனையோ பேரை எனக்குத் தெரியும். அந்த நிலை உமக்கும்

www.tamilarangam.net



வரக்கூடாது என்று நான் இதைச் சொல்லுறன். உங்கடை வயிற்றில் பிறந்தவனாக இருந்து . . . .

முதல் நீர் உம்மைப் பற்றி சிந்தியும் நீர் செய்வது சரியா பிழையா என்றும் இதனால் அடுத்தவர்களுக்கு பாதிப்பு ஏற்படுமா என்றும் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் யோசியும் என்ன?

நீங்கள் வாசலில் வந்த போதே என்ன விடயம் என்று கேட்டு எனக்கு இதில் எல்லாம் விருப்பம் - இல்லை என்று சொல்லி முகத்திலடிச்ச மாதிரி கதவையும் சாத்தி இருக்கலாம் என்ன?

நான் அப்படிச் செய்ய இல்லை ஏன் உமக்காக. அதுவும் தமிழன் என்ற வகையில் உமக்கு சில விடயங்களை கூற வேண்டும் என்ற ஒரே காரணம் தான். ஏதோ யோசித்து இனி நீர் செயற்படுவீர் என நினைக்கின்றன்.

ஆ . . . . ஜென். ஆனா நீங்கள் குறையேதும் நினைக்க வேண்டாம். நாங்கள் கொஞ்ச நேரம் தமிழிலேயே கதைக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டது.

அப்ப நாங்கள் வாறம் அண்ணை. தம்பி சாப்பிட்டு குடிச்சிட்டு போகலாம் தானே. இல்லை அண்ணை . . . . நன்றி . . . farval . . . .

"செல்வத்தையோ ஆரோக்கியத்தையோ இழந்தால் குறைந்த அளவு தான் நஸ்டம். அதை விட நம்முடைய நன்னடத்தை இழந்தால் ஏகப்பட்ட நஸ்டத்தை எதிர் நோக்க வேண்டும்"

— யெங்-பெல்லோ —

www.tamilarangam.net



என்னப்பா நீங்கள்! என்ரை கோபத்தை அவர்-
களில் தீர்த்துப் போட்டியள் போல இருக்கு.....
பாவம் சிவா..... இப்ப நீர் உதைவாங்கப் போறீர்
சாந்தி.... இங்க அப்பா நீதி நேர்மை நியாயம்
கதைத்தால் அது இப்ப யாருக்கும் புரிய மாட்டேங்கிறது.
இல்லை புரியாத மாதிரி நடிக்கின்றார்களோ, என்னவோ
காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

முற்றும்

---

# பாடி முடியாத பல்லவிகள்

கல்வி முடியுமுன்னே கல்லறையில் எத்தனை பேர்
பள்ளி முடியுமுன்னே பள்ளி கொண்டோர் எத்தனை பேர்
துள்ளும் வயதினிலே தூளானோர் ஆயிரம் பேர்.
தள்ளாத வயதினிலும் தலைபிளந்தோர் கணக்கில்லை.

தமிழ் ஆள வேண்டும் என்று வனம் வாழ்வோர் கணக்கில்லை.
தாய் மடியில் மாய்ந்த சேய்களும் தான் எத்தனையோ.
வஞ்சகரால் வாழ்விழந்த வனிதையரும் தான் உண்டு.
பஞ்சம் பசி பட்டினியால் துஞ்சியவர் பல்லாயிரம் பேர்.

பாடி முடியாத பல்லவிகள் இவை அன்றோ
விடியாத இரவுகளாய், விடிவுக்காய் மடிந்தவர்கள்.
கல் தோன்றாக் காலத்தின் முன் தோன்றி வளர்ந்திட்ட
வல்ல தமிழ் இனத்தின் தலைவிதிதான் மாறாதோ?

க. மனோகரன்.
கிளைவண்டன்

www.tamilarangam.net



# இப்படியும் நடக்கிறது

சிரிக்கச் சிந்திக்க

இரா-கருணாகரன்
FARUM

ஒரு தமிழ் இளைஞனும், ஒரு தமிழ் வயதானவரும் பேசும் போது இப்படியும் பேசினார்கள்.

இளைஞன்:- எப்பஅணை... டென்மார்க்குக்கு வந்தனியள்..?

பெரியவர்:- ஒரு மாசமாகுது மோனை...

இளைஞன்:- இங்கே பாருங்கோ எனக்கு இந்தத் தமிழர்களைப் பிடிக்காது. டெனிஸ்க்காரன்கள் எவ்வளவு நல்லவங்கள் தெரியுமே...? தமிழர்களைக் கண்டால் எனக்கு ஆத்திரம் தான் வரும். இந்தத் தமிழைப் படிச்சு என்னத்தைக் கண்டோம். தமிழனாகப் பிறந்து விட்டேன் என நினைந்து நான் ஒவ்வொருநாளும் கவலைப்படுகிறனான்... சொன்னா நம்ப மாட்டியள்.

பெரிய:- இப்படிச் சொல்லாதே தம்பி இந்த டெனிஸைப் படிக்க வேண்டுமென்று ஐந்து வருடமா ஆசைப்படுறன். இருபது வருடமா உன்ரை சொந்தப் பாஷையா தமிழைத் தானே மோனே படிச்சனி... கதைச்சனி... இந்த டெனிஸ் மொழியை கொஞ்சச் சனம் தானே கதைக்குதுகள். ஆனா.. தம்பி கிட்டத்தட்ட ஏழு கோடிப் பேரளவில் இன்றைக்குத் தமிழ் மொழியைக் கதைக்கின்றார்கள். அதோடை தமிழ் ஒரு பழம்பெருமொழி தம்பி. தமிழிலிலுள்ள பல விடயங்களை ஆங்கிலம் போன்ற மொழிகளில் மொழிபெயர்த்து வெள்ளைக்காரன்கள் படிக்கின்றான்கள். தம்பி நான் தமிழனாய்ப் பிறந்ததையிட்டு பெருமைப்படுறன் மோனை... தமிழைப்போல் ஒரு இனிமையான மொழியை என்ரை வாழ்நா

www.tamilarangam.net



-ரிலே காணவில்லை தம்பி. தெரியாமலத் தான் கேட்கிறேன்
நீ தமிழன் தானே.

இளைஞன்:- (வெறுப்பாக) ஓமோம், ஆனா நான் எப்ப இந்த நாட்டு-
-க்கு வந்தேனோ அன்றிலிருந்து தமிழனான என்னை படிப்
-படியாக வெள்ளைக்காரனாக "மொடலிங்" செய்து வாறன்.
இங்கே பாருங்கோ பின்னுக்கு கொண்டை, காது நிறைய
தோடு, மீசையை துலைச்சு ஐந்து வருடமாச்சு, என்னை
தமிழனாய் இனம் காட்டாமல் வாழ நான் ஒரு தமிழ்
வீட்டுக்கும் போறதில்லை, இன்னும் கொஞ்சக் காலம் போ-
-னால்... உங்களைக் கண்டாலும் கதைக்க மாட்டேன். ஏனென்
-டால் தமிழை மறந்திடுவேன். பிறகு என்ன எல்லாம் வெ
-ள்ளை தான்.

பெரிய:- இந்தக் கொண்டை, இந்தத் தோடு இதுகள் எல்லாம் பெட்டை
-யள் போல கிடக்குது, தம்பி. தம்பி இப்ப கலிகாலம் இப்
-படித்தான் பெண் ஆணாவதும் ஆண் பெண்ணாவதும் இய
-ற்கை மோனே. எதுக்கும் நல்ல டொக்டரிட்டைக் காட்டு,
அது கிடக்கட்டும் தம்பி, நீ இனம் இரத்தம் தானே இப்ப
டித்தானே பேசுவாய். காவோலையை பார்த்து குருத்தோ
-லை சிரிக்குமாம். பிறகு குருத்தோலை காவோலையாகு
-மாம். அதைப்பார்த்து மற்றக் குருத்தோலை சிரிக்குமாம்.
உங்களோடை கதைக்க முடியாது. உங்கடை வயது
அப்படி. சரி தவறாகத் தெரியும் தவறு சரியாகத் தெரியும்.
தம்பி எங்கடை நாட்டிலே சொல்லுவார்கள் மீசை இல்
-லாதவன் ஆம்பிள்ளை இல்லை என்று. வெள்ளைக்கா
-ரன் மீசையை வழிக்கின்றான் அவனுக்கு மீசை தெ
-ரியாது. உனக்கு என்ன குறை.

இளை:- (ஆத்திரமாக) அங்கே பாரும் இந்த விளல் கதைதானே
வேணாம் என்கிறது. நீர் எனக்கு அறிவுரை சொல்லுகின்
றீராம் நானும் அதைக் கேட்கின்றேனாம். என்ரை அம்மா
அப்பா சொன்னதையே நான் கேட்கவில்லை, உம்முடைய

www.tamilarangam.net



கதையையா...... நான் இங்கு வந்து ஐந்து வருடமாவது சகல வசதிகளோடும் வாழ்கின்றேன். இதைவிட வேறு என்ன வேணும் அழகான டெனிஸ் பெட்டை ஒன்றும் வைச்சிருக்கின்றேன். நல்லவள் தமிழ் பெட்டையளை விட மிகவும் நல்லவள்.

பெரியவ:- (நறுக்கிட்டு ஆத்திரத்தோடு) ஓம் தம்பி உம்மடை பெட்டையின் இலட்சணம் எனக்கு நல்லாத் தெரியும். நேற்று உன்ரை நண்பனோடு அந்த (Bar) பாரிலே கொஞ்சிக் கொண்டு நி-ன்றாள். நீயெல்லாம் உனக்கு ஒரு பெட்டையே. அது இடக்க உமக்கு நோயும் வேறே வருகுதே.

இளை:- (குழுக்கிட்டு) ஓய்... இதிலே என்ன தப்பு எப்படி நடக்கவும் எல்லோருக்கும் இங்கே சுதந்திரமுண்டு.

பெரிய:- (ஆத்திரமாக) பேசாதேடா.. உன்ரை அம்மா அப்பா யார-டா அவர் தமிழிச்சி, உன்ரை அப்பா உன்ரை உற்றம் சுற்றம் யாராக இருந்தடா? டேய் நீ பாஷையை மாற்-றலாம். ஆனால் உன்ரை அப்பா, அம்மாவையோ மாற்றமு-டியாதடா, அவர்கள் தமிழர்கள். காகம் எவ்வளவு தா-ன் சேற்றை அள்ளிப் பூசிக்கொண்டு தான் வெள்ளை என்-று சொன்னாலும் காக்கா காக்கா தான். கறுப்பு கறுப்-புத் தான் தம்பி.

இளை:- (ஆத்திரத்தோடு) நீயெல்லாம் ஒரு மனுசனே, அதுகிடக்க,

"மரியாதைக்கு விலை இல்லை. ஆனால் அது எல்லாவற்றையும் எளிதில் விலை-க்கு வாங்கி விடுகின்றது."

_மான்டேகு_

www.tamilarangam.net



உனக்கு வயது அறுபதோ... உன்னையெல்லாம் நாட்டிலே சுட்டிருக்க வேணும். ஏன் இங்கே வந்து எங்கடை மானத்தையும் வாங்கி இந்த நாட்டுக்கும் பாரமாய் இருக்கின்றாய். சாகிற வயதிலே உனக்கு உல்லாச வாழ்வு கேட்குதோ...? இது உனக்குத் தேவையோ...?

பெரிய:-(அனல் பறக்கும் முகத்துடன்) டேய் என்னர கைமொத்தம் கூட வரமாட்டாய் உனக்குச் சண்டித்தனமோடா உன்னைத் தூக்கி பிச்செறிஞ்சுவிடுவென், கவனமாப் பேசு முதலில் பேசிப் பழகிக் கொள்ளடா மூதேவி.

இளை:-(சிறிது தணிவான குரலில்) இனை அப்பு கொஞ்சம் சத்தம் போடாதே அங்கே பாரு டெனிஸ் பொட்டையள் வாறாளுகள். நீ சும்மா கதை இல்லாட்டி இடத்தைவிட்டு மாறு. (இளைஞன் உடையை, தலையை சீர் செய்து கொண்டான்)

பெரிய:-(கோபம் பொறி பறக்க) அட மடையா மக்கு, பண்டி இன்னடைக்கு எங்கடை நாட்டிலே எத்தனை குமர்கள் கரை சேராமல் கண்ணீர் வடிக்குதுகள், எத்தனை விதவைகள்.... எத்தனையோ பேர் கை கால் இழந்து, எத்தனையோ பெண்கள் அந்நியக்காரர்களாலே கெடுக்கப்பட்டவர்கள் எத்தனையோ வறுமையோடை... இதுகளை யோசிச்சுப் பார்த்தனியேடா...? இங்கே பெட்டையளுக்கு நிறையப் பணம் செலவழிக்கின்றாய். உன்ர பிற்கால வாழ்க்கையையும் கெடுக்கின்றாய். இதுகளை விட்டிட்டு எங்கடை பிள்ளைகளில் ஒன்றை கலியாணம் செய்து கொண்டு சந்தோசமாக வாழ வழியைப்பாரு. இதுகளை விட்டிட்டு அற்ப சுகத்துக்காக உல்லாச வாழ்வு வாழ்கின்றேன் என்ற துணிவில் எங்கடை நாடு கூடாது எங்கடை கலாச்சாரம் கூடாது தமிழர்கள் கூடாது. தம்பி எங்கடை கலாச்சாரத்திலே பெரிய வரலாறுகளே இருக்குத் தம்பி. இப்படி எங்கடை தமிழிச்சியள் கூடாது

www.tamilarangam.net



என்று கதையாதே. வாய் இருக்கெண்டு எல்லாத்தையும்
கதைக்கக் கூடாது. கதைக்கிறதுக்கு முதல் என்ன
கதைக்கின்றோம் - ஏன் கதைக்கின்றோம் என்று சிந்திச்சுப்
பேசனும். எங்கடை பெட்டையள் என்ன நடந்தாலும்
எங்கடை காதுக்குள்ளே சுற்றிக் கொண்டு இருக்கு
-ங்கள் தம்பி. அதுகள் பாவங்கள் தம்பி, எங்கடை
பெட்டையள் யாரையும் பார்த்துச் சிரிச்சா அப்படி இப்
-படி என்று கதை கட்டுவீங்கள். நீங்க இங்கே
பெட்டையளோடு ஒன்றாய்த் திரிவீங்க, ஒன்றாய் படிப்
-பீங்க கேட்டா நட்பு என்கின்றீர்கள். தம்பி நான்
வீண் பேச்சு டெனிஸ் பெட்டையள் கூடாது என்று
நான் சொல்லவில்லை, ஆனால் தமிழ் பெட்டையளைப்
போல் இதுகள் இல்லை தம்பி----


இளை:- (மீண்டும் ஆத்திரத்துடன்) டேய்... கிழவா அங்கே
பாரு நீ தமிழாலே உரக்க கதைக்கிறதைப் பார்த்து
'அன்யா' சிரிக்கின்றாள். எங்கடை பெட்டையள் என்ன
செய்யுதுகள் என்று உனக்குத் தெரியுமே? வயது போ-
-யிருக்கின்றதே தவிர மூளை படிச்சதான். நாங்கள்
எங்கடை பெட்டை ஒன்றை விரும்புவோம், பெட்டை
யின் அண்ணனுக்குப் பயப்பட வேண்டும், பெட்டையின்ரை
தகப்பனுக்குப் பயப்பட வேண்டும், அதோடை அவளும்
காதலிச்சுப் போட்டு ஏமாற்றி விடுவாள். பிறகு நாங்கள்
காதல் ஏக்கத்தில் தாடி வளர்த்துக் கொண்டு திரிய
-வேண்டும். இது தேவையா? கண்டோம், கதைச்சோம்
முடிச்சோம் என்று வாழத் தெரிய வேணும். உமக்கு
இது என்ன தெரியப் போகுது, எங்கடை பெட்டையள்
எல்லாத்தையும் திரைமறைவிலே செய்வார்கள் - இது-
-கள் எல்லாவற்றையும் வெட்ட வெளியிலே செய்வார்
-கள். இதுக்கு அது சமன். இனியும் விளக்கமில்-
-லாத உன்னோடு கதைக்க எனக்கு விருப்பமில்லை
அன்யா வாறன் என்டாள் டிஸ்கோவுக்குப் போக
வேண்டும், கிழவா போ, இன்னும் இருந்தா அடிச்சு

தொடர்ச்சி-பக்-6

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# குறுக்கெழுத்து

## போட்டி:11

குறுக்கெழுத்துப் போட்டி இல: 11 சஞ்சீவி சார்பில் - வாசகர்களுக்கும், போட்டியாளர்களுக்கும் தனது அன்பான புத்தாண்டு நல் வாழ்த்துக்கள் பல கூறி போட்டிக்கு அழைக்கிறது.
நீங்கள் குறுக்கெழுத்துக் கட்டங்களை பூர்த்திசெய்து சஞ்சீவிக்கு அனுப்பிவைக்க வேண்டும். அதற்கான கேள்விகள் கீழே தரப்பட்டுள்ளன. உரிய விடைகளைத் தெரிவு செய்து கட்டங்களை பூர்த்திசெய்வது உங்கள் பொறுப்பாகும்:

**கேள்விகள்: இட : வலம்:**

1. 13: விறகினை எரித்தால் இருக்கும் மிகுதியாகும்.
4. 43: காவற்படையினர் எமது தாய் நாட்டில் இதனை முன்னிறுத்தே மக்கள் வாழும் பகுதியுள் சுற்றிவளைப்புகளை நடாத்துகின்றனர். ஆனால் இது குழம்பியுள்ளது.
6. 21: வங்காள விரிகுடாவினையும், அதனை அண்டிய பகுதிகளையும் இந்தப் பெயர் கொண்டு அழைப்பார்.
7. 33: மன்னர் அரியாசனத்துக்கு அருகிலும், தமிழ், சிங்கள சமய விழாக்களின் போதும் உதவுவார்களினால் ஏந்திச் செல்லப்படும் சிறிய சின்னம் போன்ற தண்டு இதுவே.
12. 15: ஈழ நாட்டின் வட பகுதியில், அதிகமாக உள்ள கரிய நிற மரம் இதுவாகும். இந்த மரம் அங்கு தற்போது வதியும் மக்களுக்கு பெரிதும் உதவுகிறது.
22. 5: இதுவோர் சிறு இனத் தாவரம், பூவுடன் சேர்ந்த இதனை உணவுக்காகப் பயன்படுத்துவர்.
29. 24: நீர்த்தேக்க, அணைக்கட்டின் ஆங்கிலச் சொல் இது.
42. 30: "மகிழ்ச்சி" என்பதன் மறு பதமும், ஓர் ஊரின் பெயரும் இதுவேயாகும்.
48. 35: வயது போனவர்களையும், வயது போன மாடு போன்ற மிருகங்களையும் இப்படி ஏளனமாகக் கூறுவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



51. 28: வயிற்றின் அடிப்பகுதியில் உள்ள பையில் தனது குட்டியினை சுமந்து செல்லும் இந்த மிருகம், அவுஸ்த்திரேலியா நாட்டின் தேசிய மிருகமாகும்.

52. 26: அதிகமானோர்க்கு பார்வை, கேள்விப்புலம் திடீரென தாக்கம் ஏற்படும் போது இது ஏற்படும். இது குழம்பியுள்ளது

## போட்டியின் விபரங்களும் நிபந்தனைகளும்

1. சஞ்சிகையின் ஆசிரிய, செயற்குழு தவிர்ந்த எவரும் பங்கு கொள்ளலாம்.
2. போட்டியில் பங்கு கொள்பவர் கட்டங்கள் அனைத்தையும், அத்துடன் சரியான முகவரியினையும் தெளிவாக எழுதி இதழின் இறுதிப்பக்கத்தில் உள்ள கட்ட அஞ்சல் பத்திரத்தை பூர்த்தி செய்து 01.11 க்கு முன்னதாக சஞ்சிகைக்கு அனுப்பிவைத்தல்.

(முகவரி அஞ்சற்பத்திரத்தில் உள்ளது.)

3. இதழின் அசல் பிரதியே ஏற்றுக் கொள்ளப்படும்.
4. போட்டி முடிவுகள் சஞ்சிகையின் நடுவர் குழுவினரால் தெரிவதாம் மேற்கண்ட விதிமுறைகளுக்கமையவும், சரியாகவும், தெளிவாகவும் பூர்த்தி செய்யப்பட்ட போட்டிக் கூப்பன்கள் சீட்டிழுப்பு மூலம் 1ம், 2ம், 3ம் பரிசுகளுக்கான தகுதியினைப் பெறும்.
5. போட்டி சம்பந்தமான நடுவரின் தீர்ப்பே இறுதியானது.
6. சரியான விடையும், பரிசில்கள் பெற்றவர்களின் விபரங்களும் அடுத்து வரும் இதழில் வெளியிடப்படும். பரிசில்கள் உரியவர்களுக்கு காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும்.

கேள்விகள்: மேல் - கீழ்:

7. 3: கையினாலும், இயந்திரங்களினாலும் கீறப்படும் படங்களை இப்படி அழைப்பர். இது குழம்பியுள்ளது.

7. 10: 2வது உலகமகா யுத்தத்தின் போதும், அதன்பின்பாடும் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை "இந்த" முறையில் செய்து கொடுக்க வேண்டும் என்ற பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் திட்டத்தினை இலங்கையிலும் தொடங்கப்பட்டது.

www.tamilarangam.net



12. 13: குதிரைக்கு இந்தப் பெயரும் உண்டு.
20. 17: ஒரு செயற்பாட்டுக்கு மறு விளைவு ஏற்படும் என்பதனை, இப்படிக் கூறுவர். இது குழம்பியுள்ளது.
20. 24: வெற்றிலை, பாக்கு, காசுக் கட்டி என்பவற்றோடு இதற்குத் தேவையானவையும் சேரும் போது, இந்தப் பெயர் பெறுகிறது.
27. 30: M.G.R நடித்த வெற்றிப் படங்களில் ஒன்றின் பெயரும், பெரியோர்கள் தவறு செய்யும் சிறியோர்க்கு இப்படியும் புத்திமதி சொல்வர்.
36. 35: கூடுதலாக எல்லா வீடுகளிலும் இது உள்ளது. ஒவ்வொருவருக்கும் உடம்பு அலுப்புத்தீர, மன நிம்மதிக்கு இதுவும் இன்றியமையாதது. எழுத்தில் இது இல்லாமல் அல்லற்படுவோர் பலர்.
38. 39: முன்பனி, பின்பனி, கூதலுடன் இதுவும் சேரும். ஒரு வகை வாகன ஊர்திக்கு இந்த ஆங்கிலப் பதமும் பயன்படுத்தப்படுகிறது.
40. 44: இலங்கையில் உள்ள மொழிகளில் ஒன்று. இது குழம்பியுள்ளது.
47. 48: மகிழ்ச்சிக்கு இப்படி ஒரு பதம் உண்டு.
52. 50: காடுகளில் பெரிய மிருகங்களைப் பிடிப்பதற்கு பெரும் கிடங்கான "இதனை" வெட்டியே பொறியமைப்பர்.

- எம்.ஜி. லோகா.

---

போட்டியிலக்கம்: 10ன் விடைகள், பரிசில் பெறுவோர் முகவரிகளும், போட்டி இல: 11ன் விடைகள், பரிசில் பெறுவோர் விபரங்களைத்தும் இதழ் இல: 13ல் வெளியிடப்படும்.

- ஆசிரியர்.

---




அண்ணன்: டேய் தம்பி! கேள்விப்பட்டியே... அகதிகளுக்குக் காசு சேர்க்க வேண்டு கொஞ்சப் பேர் வெளிக்கிட்டிருக்கினமாம்... காசைச் சேர்த்து தங்கடை பொக்கற்றுக்கை போடுறதுக்காகத்தாம்....

தம்பி: நீ திருந்தவே மாட்டாய்! எப்பவும் வைக்கல்பட்டடை நாய் மாதிரி.. சீ.. இதுவரை நீ எந்த நல்ல விசயத்திற்கு உதவி செய்தனி.. உப்பிடிச் சொல்லிச் சொல்லியே.... ம்.

www.tamilarangam.net



# குறுக்கெழுத்துப் போட்டி :11



www.tamilarangam.net



»CHANCHIVE«
Postbox: 1205
7500 Holstebro . Danmark

NR: 11

afs.

www.tamilarangam.net

# எல்லை கடந்த கலை.

அண்மையில் "Helsingør" நூல்நிலையத்தில் நடைபெற்ற "எல்லை கடந்த கலை" என்னும் தலைப்பில் நடைபெற்ற சர்வதேச ஓவியக்கண்காட்சியில் கொல்ஸ்ரப்போ வாழ் தமிழரான திரு. சிவநாதன் அவர்களின் ஓவியமும் இடம்பெற்றது. இந்த ஓவியக் கண்காட்சி அடுத்து வரும் ஆறுமாதங்களுக்கு டென்மார்க்கின் சகல பகுதிகளிலும் பரவலாக இடம்பெறும்.

இந்தக் கண்காட்சிப் போட்டியில் திரு. சி. சிவநாதன் அவர்களின் ஓவியம் தெரிவு செய்யப்பட்டிருப்பது தமிழர் ஆகிய எமக்கும் பெருமையே. திரு சிவநாதன் அவர்களை சஞ்சீவி வாழ்த்துகின்றது.



அன்பான வாசகப் பெருமக்களுக்கு எமது உளம் கனிந்த நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்.

"சஞ்சீவி"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"CHANCHIVE"
Tamilsk-Dansk Venskabsforening,
Postbox:1205,
7500 Holstebro.Danmark.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்